**செப்டம்பர் - 1**

**"அதற்குக் கர்த்தர், நீ போ; அவன் புற ஜாதிகளுக்கும் இராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான் என்றார்." - அப் 9 : 15**

யேசு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவராய் இருக்கிறதை நாம் பார்க்கிறதினால் நாம் அவருடன் ஒன்றாக இணைகிறோம். பிதாவினுடைய குணம் அவரில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதைக் காண்கிறதால் அவரைப் பின்பற்ற எல்லாவற்றையும் விட்டு விடுகிறோம். அது போலவே தேவ ஏற்பாடும் ஊழியமும் சம்பந்தமாக நாம் நமது உதவியையும் நமது ஆதரவையும் யாராவது ஒரு மானிட ஜீவிக்கும் கொடுக்கிறோம் என்றால், அது வெறும் ஒரு நபருக்குரிய கவர்ச்சியோ, அல்லது பாரபட்சமோ அல்லாமல், அந்தத் தலைவன் கர்த்தருடைய நியமனமாயிருக்கிறான் என்ற உணர்ச்சியோடு நம்முடைய இருதயங்கள் கர்த்தரால் தொடப்படுகிறதால் தான். **- Z '03, 206 (R 3218)**

இங்கே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிற உருவகம் தெளிவாய்க் காட்டுகிற ஒன்றாகும். ஒரு பாத்திரம் ஏதாவதொரு ஆசிர்வாதத்தை மற்றவர்களுக்கு கொண்டு போவதற்காக ஒருவரால் உபயோகப்படுத்தப்படுகிறது. அவ்விதமாய் தேவனுடைய ஊழியக்காரர் கர்த்தரின் ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்குக் கொண்டு போவதற்காகவுள்ள கருவிகளாயிருக்கிறார்கள். தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம் மிகச் சிறந்த ஆசிர்வாதங்களை கொண்டுபோக உபயோகப்படுகிறது போல, எந்த வழியிலும் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமான பவுல், சர்வ வல்லவரா; ஒரு பொழுதும் கொடுக்கப்படாத மிகவும் செல்வமுள்ள சத்தியத்தின் ஆசிர்வாதங்களின் சிலவற்றைக் கொடுக்கக் கர்த்தரால் உபயோகிக்கப்பட்டிருக்கிறார். அவர் யூதர்களுக்கும், புறஜாதியாருக்கும், ராஜாக்களுக்கும் கூட ஊழியஞ்செய்தது போல ஒரு நிரந்தரமான ஆசிர்வாதத்தை விட்டுச் சென்றிருக்கிறார். அதன் இன்பமான மணம் நம்முடைய காலங்களில் கூட பொசிந்து பரவுகிறது. அவருடைய ஊழியம் மிகப்பெரிய பலனைக் கொடுக்கிறதாய் இருந்திருக்கிறது. பவுலைப்போல தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரங்களாக இருக்க நாம் நாடுவோமாக.
**- P '32, 136.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**அப் 13:2; 22:21; 25:22,23; 26:1,16,17; ரோம 1:1,5; 12:6-8; 1கொரி 15:10; கலா 1:15; 2:7,8; எபே 3:7,8; 1தீமோ 2:7; 2தீமோ 1:11.**

**கோபுர வாசிப்பு : Z '01, 182 (R 2823).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் சத்தியத்துக்கு சாட்சி கொடுத்தேனா? எப்படி? ஏன்? பலன்கள் என்ன?**